**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: S. அன்புதாசன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**குற்ற பல்வகை மனு எண்.707/2025**

தங்கராஜ், வயது 60/2025,
த.பெ. சின்னச்சாமி,
கதவு எண்.15-4-50, மெயின்ரோடு,
ஆலத்தூரான்பட்டி,
கன்னிவாடி,
திண்டுக்கல் மாவட்டம். ... மனுதாரர்/புகார்தாரர்

**//எதிர்//**

1. பால்ராஜ், வயது 27/2025,
   த.பெ. முருகேசன்,
   ஆலத்தூரான்பட்டி,
   கன்னிவாடி,
   திண்டுக்கல் மாவட்டம்.

2. சங்கர், வயது 31/2025,
   ஆலத்தூரான்பட்டி,
   கன்னிவாடி,
   திண்டுக்கல் மாவட்டம்.

3. முருகேசன், வயது 55/2025,
   த.பெ. வீரப்பன்,
   ஆலத்தூரான்பட்டி,
   கன்னிவாடி,
   திண்டுக்கல் மாவட்டம்.

4. மாரிமுத்து, வயது 31/2025,

த.பெ. கோவிந்தராஜ்,
ஆலத்தூரான்பட்டி,
கன்னிவாடி,
திண்டுக்கல் மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள்/குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

காவல் ஆய்வாளர்,
கன்னிவாடி காவல் நிலையம்,
கன்னிவாடி. ... சட்டநிலை புகார்தாரர்

இம்மனுவானது 13.10.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. மருதமுத்து B.Sc., LLB., அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டு இதுநாள்வரையில் இந்நீதிமன்ற விசாரணையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க கன்னிவாடி காவல்நிலைய போலிசாருக்கு சட்டபிரிவு 175(3) BNSS - இன் படி உத்தரவிடுமாறு இம்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுவின் சுருக்கம்</u>**

1) மனுதாரர் ஆலத்தூரான்பட்டியில் ஊர் பெரியதனமாகவும் மற்றும் ஆலத்தூரான்பட்டியில் உள்ள அருள்மிகு பார்வதி பரமசிவன் கோவிலில் நிர்வாகத்தின் தலைவராகவும் உள்ளார் என்றும், மனுதாரர் தரப்பில் மேற்சொன்ன கோவிலை கடந்த 2015 ஆம் வருடம் கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்று முடிவு செய்து நன்கொடை பெற்று கடந்த 21.08.2015 ஆம் தேதி அன்று பூமி பூஜை நடைபெற்று, கடந்த 05.06.2022 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றதாகவும், கடந்த 05.04.2023

அன்று வரவு செலவு பார்க்கப்பட்டு மீதம் ரூ.1,01,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஆயிரம் மட்டும்) இருந்தது என்றும், முருகேசன் மகன் பால்ராஜ் என்பவர் வரவு செலவுகளை பார்த்து, அவர் கைவசம் மீத தொகை ரூ.1,01,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஆயிரம் மட்டும்) கைவம் கொடுத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) கடந்த ஏப்ரல் மாதம் மனுதாரர் குற்றஞ்சாட்டப்பட்டவரான பால்ராஜ் என்பவரிடம் மேற்சொன்ன கோவிலின் நோட்டுகளை தனது வீட்டிற்கு வா என்று கூறியதாகவும், பால்ராஜ் என்பவர் மூன்று நோட்டுகளை மட்டும் கொடுத்ததாகவும், மீத நோட்டுகளை மனுதாரர் கேட்டபோது ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) த்தை தனக்கு கொடுத்தால் தான் மீத நோட்டுகளை கொடுப்பேன் என்று குற்றஞ்சாட்டப்பட்டவரான பால்ராஜ் சொன்னதாகவும், கொடுக்காமல் போனால் கோவில் நிர்வாகிகள் மீது பொய்யாக ஊழல் நடந்துள்ளது என்று ஊர் பொதுமக்களிடம் கூறுவேன் என்றும் கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) பின்பு மனுதாரர் ஊர் பெரியதனம் என்ற முறையில் கன்னிவாடி காவல் நிலையத்தில் இதைபற்றி கடந்த 28.07.2025 அன்று பால்ராஜ் என்பவர் மீது புகார் கொடுத்து மனு ரசீது எண்.430/2025 பெற்றுக்கொண்டார் எனவும், பின்பு கடந்த 02.08.2025 அன்று மனுதாரரை பின் தொடர்ந்து வந்த பால்ராஜ், மாரிமுத்து, முருகேசன் ஆகியோர் வழிமறைத்து பால்ராஜ் என்பவர் மனுதாரரை தகாத வார்த்தைகளால் பேசியும், பால்ராஜ் என்பவருடன் உடன் இருந்தவர்கள் மனுதாரரை மிரட்டியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) மேற்படி சம்வபம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது கடந்த 08.08.2025 அன்று கன்னிவாடி காவல் ஆய்வாளர் அவர்களுக்கும், ஒட்டன்சத்திரம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் புகார் மனு கொடுத்தும், பிறகு நடவடிக்கை எடுக்கக்கோரி கடிதங்கள் அளித்திருந்தபோதிலும், மனுதாரர் அளித்த புகார்

சம்மந்தமாக எவ்வித நடவடிக்கையும் இதுநாள் வரை எடுக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5) மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் செய்கையானது சட்டபிரிவுகள் 306, 314, 316, 318, 325, 344 BNS ன் கீழ் தண்டிக்கப்பட் வேண்டிய குற்றம் எனவும், எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க சட்டபிரிவு 175(3) BNSS இன் படி கன்னிவாடி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவிட வேண்டி புகார்தாரர் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

இவ்வழக்கு மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு மனு சங்கதிகளின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடுவதற்கு போதுமான முகாந்திரம் உள்ளதா? என்பதும் இவ்வழக்கு மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதுமேயாகும்.

**3) தீர்வு**

1) புகார்தாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

2) 02.08.2025 அன்று காலை 08.00 மணியைபோல புகார்தாரர் வீரப்புடையான்பட்டி செல்லும்போது பாப்பாத்த அம்மன் கோவில் அருகே புகார்தாரரை கண்காணித்து பின் தொடர்ந்து வந்த பால்ராஜ் மற்றும் அவருடன் இருக்கும் மாரிமுத்து, சங்கர், பால் அவரது அப்பாவான முருகேசன் ஆகியோர் வந்து பால்ராஜ் என்பவர் தன்னை தகாத வார்த்தைகளால் பேசினார் என்று மட்டும் கூறியுள்ளார். என்ன விதமாக தகாத வார்த்தைகளால் பேசினார் என்று குறிப்பிட்டு கூறவில்லை.

3) 21.08.2015 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடத்துவற்காக பூமி பூஜை செய்து கடந்த 05.06.2022 ஆம் தேதி கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது என்றும்,

கோவில் வரவு செலவு கணக்குகள் 05.04.2023 ஆம் தேதி ஊர் பொது கூட்டம் போட்டு வாசிக்கப்பட்டது என்று புகாரில் கூறப்பட்டுள்ளது. வரவு செலவு கணக்கு முடிந்து மீதம் ரூ.1,01,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஆயிரம் மட்டும்) குற்றஞ்சாட்டப்பட்ட முருகேசன் மகன் பால்ராஜ் என்பவரிடம் கொடுத்து வரவு செலவு நோட்டுக்களை எழுதுவதற்கும், படிப்பதற்கும் எங்களுடன் வைத்திருந்தோம் என்று புகார்தாரர் மனுவில் கூறியுள்ளார்.

4) 2023 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் கணக்கு முடிக்கப்பட்ட பிறகு 2024 இல் கணக்குகளையும், கணக்கு நோட்டுகளையும் கேட்காமல் 2025 ஏப்பரல் மாதம் தான் பால்ராஜிடம் கணக்குகளையும், கணக்கு நோட்டுகளையும் புகார்தாரர் கேட்டதாக கூறியுள்ளார். இடையில் உள்ள காலகட்டத்தில் 2024 ஆம் வருடத்திற்கான கணக்கு கேட்கப்பட்டதா இல்லையா என்று குறிப்பிட்டு கூறவில்லை. ரூ.5,00,000/- கடன் கேட்டு பால்ராஜ் கணக்கு நோட்டுகளை கொடுக்க மறுக்கிறார் என கூறியுள்ளதற்கு அன்றைய காலகட்டத்திலேயே புகார்தாரரால் புகார் மனு கொடுக்கப்படவில்லை என்பதாலும், கணக்குகளை சமர்ப்பிக்கச்சொல்லுவது முழுக்க முழுக்க உரிமையியல் தன்மை கொண்ட வழக்கு என்பதாலும், அதிக கால இடைவெளிகள் புகார் கொடுப்பதற்கு ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும் இந்த புகாரின் மீது புலன்கொள்ளத்தக்க குற்றத்திற்கான வாசகங்கள் இருந்தாலும், மேற்சொன்ன காரணங்களால் இந்த புகாரின் உண்மை தன்மை குறித்தும், இந்த புகாரின் மீது முதல் நோக்கு வழக்கு உள்ளதா என்பதை இந்நீதிமன்றம் அறிந்துகொள்வதற்கும் ஊர் முக்கியஸ்தர்களையும், ஊர் பொதுமக்களையும் விசாரித்து புகார் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையான என கண்டறிவதற்கு ஒரு முதற்கட்ட விசாரணை மிகவும் அவசியம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5) மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பான Lalitha kumari Vs Government of UP and others dated:12.11.2013 என்ற வழக்கில் சொல்லியுள்ள ஐந்து விதமான சூழ்நிலை மட்டும் முதல் நிலை விசாரணைக்கான

உத்தரவு இறுதியானது கிடையாது என்றும், அந்த முன்தீர்ப்பிலேயே நீதிமன்றம் கருதும் பட்சத்தில் முதல் நிலை விசாரணைக்கு உத்தரவிடலாம் என்று பொருள் தரும் விதத்தில் (Not exhaustive) என்று கூறப்பட்டுள்ளது.

6) எனவே, புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ள உண்மைதன்மையை அறியும் பொருட்டு மாண்புமிகு உச்சநீதிமன்ற முன் தீர்ப்பான Lalitha kumari Vs Government of UP and others dated:12.11.2013 இன் படி உத்தரவு கிடைக்கப்பெற்ற 14 நாட்களுக்குள் முதல் கட்ட விசாரணை மேற்கொண்டு, முதல் கட்ட விசாரணையின் அறிக்கையை இரண்டு வாரத்திற்குள் நீதிமன்றத்திற்கு தாமதமின்றி அறிக்கையை அனுப்பிவைக்க வேண்டும் என்று காவல் ஆய்வாளர், கன்னிவாடி காவல் நிலையம், அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பார்வையிட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம். திரு. S. அன்புதாசன்)**
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஆத்தூர்.

//உண்மை நகல்//

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.02.03 10:30:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஆத்தூர்.